# பத்துப்பாட்டில் நெல் சாகுபடி

*கோ. ஐஸ்வர்யா*
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783407

***ஆய்வுச் சுருக்கம்***

*செவ்வியல் இலக்கியங்களில் முக்கியமானது சங்க இலக்கியம் ஆகும். இவற்றுள் மிக நீண்ட அடிகளைக் கொண்ட பாடலாக உடைய பத்துப்பாட்டு நூல்களை ஆராயும்போது வேளாண்மை பற்றிய செய்திகளை ஏராளமாக காணப்படுகின்றன. ஓர் உழவன் நிலத்தை தேர்ந்தெடுத்து அதனை பன்முறை உழுது, தகுந்த அளவு நீர் பாய்ச்சி, நெல் விதைத்து பயிர் நடவு செய்து, களை பறித்து நெல் அறுவடை செய்யும் வரை உள்ள பல நிகழ்வுகளையும் தத்ரூபமாக பத்துப்பாட்டில் படம் பிடித்து காட்டப்பட்டுள்ளது. தற்போது நம் தமிழர்கள் செய்யும் நெல் சாகுபடி ஆனது பத்துப்பாட்டு செப்பும் தமிழ் மாந்தர்களாகிய நம் முன்னோர்கள் கற்றுக் கொடுத்தது எனலாம்.*

***கலைச்சொற்கள்:*** *பத்துப்பாட்டு உழவு வேளாண்மை நெல்.*

**முன்னுரை**

*உணவே தலை என்பதற்கு ஏற்ப, விவசாயமே சங்ககாலத்தில் முதன்மையான தொழிலாக இருந்தது பாட்டு என்று அழைக்கப்படும் பத்துப்பாட்டில் நெல் விதைத்தல் முதல் நெல் அறுவடை செய்து போர் வைத்தல் வரை உள்ள பல்வேறு நிகழ்வுகள் உள்ளன அவற்றை ஆராயும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.*

**உழவு**

*உழவுத் தொழில் பன்னெடுங்காலமாக தமிழரது தலையாய தொழிலாக அமைந்திருப்பதன் மூலம் இதற்கான முதல் சான்றினைத் தருவது பழந்தமிழ் இலக்கணம் நூலாகிய தொல்காப்பியம் ஆகும். அக்காலத்தில் உழவர்கள் அனைவரையும் வேளாண் மாந்தர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். வேளாண் என்னும் சொல்லை வேள் + ஆள் என்று பிரிக்கலாம். வேள் என்றால் மண் என்று பொருளாகும். ஆள் என்றால் ஆளுதல் என்னும் பொருளாகும். வேளாண் என்றால் மண்ணை ஆள்பவர்கள் என்று பொருள். இதனால்தான் தொல்காப்பியர் உழவர்களை வேளாண் மாந்தர் என்று குறிப்பிடுகிறார். வேளாண் மாந்தரின் தொழில் உழவுத் தொழில் என்பதை,*

***வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது***
***இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி[1]***

*வரலாற்றில் வேளாண்மையின் வளர்ச்சியும் முன்னேற்றமும் வெவ்வேறு தட்பவெட்ப நிலைகள் பயன்பாடுகள் தொழில்நுட்பங்கள் போன்றவற்றைச் சார்ந்து மாறுபட்டு இருந்தன. எனில் விலங்குகள், தாவரங்கள் பழக்கப்படுத்தி பயன்பாட்டுக்கு கொண்டுவர நிலத்தை பயன்படுத்துவதற்காக பல நிலையில் இந்த உலகில் பிற தொழில் செய்வோருக்கு உணவளித்து உயிர் வாழ செய்பவர்கள் உழவர்களே ஆவர். அவர்களே இந்த உலகிற்கு அச்சாணி ஆவர் என்பதை வள்ளுவர்,*

***உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதுஆற்றாது***
***எழுவாரை எல்லாம் பொறுத்தண்டம்[2]***

*என்ற திருக்குறளின் மூலம் நிரூபிக்கிறார்.*

*நிலத்தை உழுது பயன்படுத்தி விளைச்சலுக்கு ஏற்ற நிலமாக அமைப்பது உழவுத் தொழில் எனப் பெயர் பெற்றது. மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத இத்தொழிலை குறித்து சங்க புலவர்களில் இருந்து இன்றைய*

*புலவர்கள் வரை எடுத்து வந்துள்ளனர். உழவுத்தொழில் செய்பவர்கள் உழவர்கள் இவர்கள் தங்கள் நிலங்களை பண்பட்ட நிலமாக மாற்றினர். பெருமளவில் விளைச்சலை தரக்கூடிய நிலம் என்பதற்கும் அங்குள்ள நெற்கதிர் முற்றிய நிலையில் வளர்ந்து நிற்கும் என்ற காட்சியை,*

***"அங்கன்அகல்வயல் ஆர்பெயல் கலித்த***
***வன்தோட்டு நெல்லின் வருகதிர்" -(நெ.வரி.எ.22)***

*என்ற நெடுநல்வாடை குறிப்பிடுகிறது.*

*உழவு இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை,*

1. *நன்செய் உளவு*
2. *புன்செய் உளவு*

**நன்சய் உளவு**

*குலைகளையுடைய தென்னை, குலைகளையுடைய வாழை, முற்றிய காய்களை கொண்ட பாக்கு மரங்கள், மணம் வீசும் மஞ்சள், பல்வேறு மாமரங்கள், குலைகளை உடைய பனை மரங்கள், அடிப்பகுதி பருத்து விளங்கும் சோம்பு, முளைகளை உடைய இஞ்சி ஆகியவற்றின் விளையுள் நீங்காத வயல்களை கொண்ட நாடு என்று நாட்டின் வளத்தை எடுத்துரைக்கிறது.*

***"காய் செந்நெல் கதிர் அறுத்து***
***கோள் தெங்கின் குலைவாழை***
***வாய்க்காழுகின் கமழ்மஞ்சள்***
***இனமாவின், இணர்பெண்ணை***
***முதற்சேம்பின் முளைஇஞ்சி***
***அகல் நகர் வியன் முற்றத்து" - (ப.பா.வ.எ.12)***

*என பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. மேலும் பரந்துபட்ட நிலத்தை உழுது நிறைப்பாய்ச்சி பயிர் விளைச்சலை உண்டாக்கக் கூடியதாக அமைந்திருப்பது நன்செய் உழவாகும்.*

***உண்பு எனப்படுவது நிலத்தொடுநிரே***
***தற்போர் அம்ம இவன் தற்போரே[3]***

*என்று நன்செய் உழவு இருப்பதை புறநானூறு பாடல் மூலமும் உணர முடிகிறது.*

**ஏர் உழும் முறை**

*சங்ககாலத்தில் மக்கள் நெல் விளைவிக்க முதலில் மாடுகளினால் நிலத்தை மிதிக்க விடுவர். சேற்றினைகாலால்மட்டப்படுத்துவர். நாற்று நடுவர், களை பறிப்பர், அறுவடை செய்வர், நெற்கதிர் கட்டினை களத்தில் சேர்ப்பர், சூடு மிதிப்பர், காற்றிலே தூற்றுவர் இவ்வாறு நெல் விளைவித்தல் பற்றிய செய்திகளை நிழல் பட சங்க இலக்கியத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.*

***"ஞாங்கர்க்***
***குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்***
***நடைநவில் பெரும்பகடுபுதவில் பூப்பு***
***பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்***
***வன்புலம் இறந்த பின்றை" - (பெ.வரி.எ.206)***

*என்ற பெரும்பாணாற்றுப்படை விளக்குகிறது.*

*அறுவடை காலத்தே செய்யும் ஆரவாரத்தை கண்டு அப்பயிரிடையே வாழ்ந்து கொண்டிருந்த குறுங்காவுகளையும் கரிய கழுத்தினையும் உடைய கரிச்சான் குருவி வெள்ளிய நறுமணம் கொண்ட வெண்டகம்பப் பூவை ஒத்துதன் வளரும் குஞ்சுகளுடன் தாய் பறவை காட்டிற்கு சென்று தங்கும். தன்மையிலிருந்து நெல் அறுவடை நடக்கும் என்பதையும்,*

***நெடுநல்லடச்சிய கழனி ஏர் புகுந்து***
***குடமிக் கட்டிய படப்பையொடு மிளிர***
***அரிகால் போழ்ந்த தெரி பகட்டு உழவர்***
***ஒதைத்தில் விளிப்புலம் தோறும் பரப்ப[4]***

*என்ற பாடல் அடிகள் தெளிவுபடுத்துகின்றன.*

***நெல் சாகுபடி***

***நாற்று நடுதல்***

*உழவர்கள் வயலை ஆண் ஏறுகள் வைத்து உழுது அதன் பின் நாற்று நடும் வேலையை செய்தனர் என்பதை,*

***"கார்ஏறு பொருத கண் அகன் செறுவின்***
***உழா அநுண்தொளி நிரவிய வினைஞர்***
***முநாறு அடுத்திய நெடுநீர்ச் செறுவில்"***
***- (பெரும்.வ.எ.213)***

*என்ற பெரும்பாணாற்றுப்படை வரிகள் உணர்த்துகிறது.*

*நெல்லின் நடுவே வளர்ந்திருக்கும் தேவையில்லா செடிகளை அகற்றும் களைப் பறிக்கும் தொழிலை சங்ககால மக்கள் செய்துள்ளனர் என்பதை,*

***கைவினை மாக்கள் தம் செய்வினை முடிவார்[5]***

*என்ற குறுந்தொகை வரி குறிப்பிடுகிறது. மேலும் கையால் களை எடுக்கும் தொழிலை செய்வோர் கைவினை மக்கள் என பெயர் பெற்றனர் என்ற குறிப்பை தருகிறது.*

**நெல் அறுத்தல்**

*உழவர்கள் நெல்முற்றிய பின் அதனை அறுவடை செய்தனர் இச்செயல்கள் பற்றி*

***"தும்புடைத்திறள் தாள் துமித்த வினைவர்***
***பைது அற விளைந்த பெருஞ்சற் நெல்லின்"***
***- (பெரும்.வ.எ.230)***

*என்று பெரும்பாணாற்றுப்படை உழவுத் தொழில் செய்பவர்கள் பசுமை நீங்கும்படி முற்றிய பெரிய செந்நிலின் உட்புறம் வெற்றிடமாக உள்ள துன்புடைத்தாலினை அறுக்கும் தொழில் செய்வோர் என்று எடுத்துரைக்கிறது. மேலும்,*

***வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ***
***கண்மடல் கொண்ட தீம் தேன் இரிய***
***கள் அரிக்கும் குயம்[6]***

*என்று புறநானூறு நெல் அறுவடை செய்யும் நிகழ்வை காட்டுகிறது.*

**நெல் போர் குவித்தல்**

*உழவர்கள் நிலத்தை பண்படுத்தி உழுது நாற்று நடுவர். நல்ல விளைச்சலுடன் அறுவடைக்கு உரிய காலம் வந்தவுடன் அதனை அறுவடை செய்து நிற்போராக குவித்திருப்பர்.*

***"நாவாலோ நாவாலோ என்று***
***ஆரவாரத்துடன் முழங்குவான்"***

*என்று பெரும்பாணாற்றுப்படை உணர்த்துகிறது. மேலும்*

***காய்நெல் வறுத் துக்க வளங்கொளினே[7]***

*என்ற புறநானூறு பாடல் மூலம் புலனாகிறது.*

**முடிவுரை**

*சங்க கால மாந்தர்களின் தொழிலில் வேளாண்மை முக்கிய தொழிலாக இருந்தது. அவற்றுள் நெல் சாகுபடி முதலிடம் பிடித்திருக்கிறது. பயிர் நடுதல் முதல் நெல் அறுத்து போர் குவிக்கும் முறை முதல் ஒவ்வொரு நிகழ்வையும் பத்துப்பாட்டு நூல்கள் சிறப்பாக எடுத்துரைப்பதையும் இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது.*

**சான்றெண் விளக்கம்**

1. *திருஞானசம்பந்தம், தொல்பரபு, ப.எ.378.*
2. *செந்தமிழ்செழியன், குறள்.1032.*
3. *புலியூர்கேசிகன், புறநானூறு, வ.எ.50.*
4. *புலியூர்கேசிகன், அகநானூறு, வ.எ.41.*
5. *புலியூர்கேசிகன், குறுந்தொகை, வ.எ.309.*
6. *புலியூர்கேசிகன், புறநானூறு, வ.எ.348.*
7. *மேலது, வ.எ.184.*

**துணை நூற்பட்டியல்**

1. *புலியூர்கேசிகன், புறநானூறு, பாரிநிலையம், 194, பிராப்வே, சென்னை, முதற்பதிப்பு - 1960.*
2. *மோகன்.ரா, பத்துப்பாட்டு, 41, பி.சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.*